**ஸ்டான்டர் சாட்டர்ட் வங்கி, கொழும்பு - இலங்கை**

---

## அதி முக்கிய அம்சங்கள் பற்றிய ஆவணம் (MID)

**வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கணக்கு(கள்) தொடர்பில் என்னால்/எம்மால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, ................................ ஆம் இலக்க ................................. நாணய கணக்கு தொடர்பான பின்வரும் விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டு அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க நான்/நாம் இத்தால் இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.**

- **சுப்பர் வல்ய சேமிப்புக் கணக்கு / சுப்பர் வல்யூ நடைமுறைக் கணக்கு / மை ட்ரீம் கணக்கு / எம்புளோயி பாங்கிங் கணக்குகள்** என்பவற்றின் சிறப்பம்சங்கள் வங்கியின் பிரதிநிதியினால் எனக்குத் திருப்திகரமான முறையில் விளக்கிக்கூறப்பட்டுள்ளன.
- வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட சகல ஆவணங்களும் என்னால்/எம்மால் சமர்ப்பிக்கப்பட்டு, வங்கியின் தேவைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர், வங்கியினால் வழங்கப்படும் **கணக்கிற்கான** விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.
- இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவற்றையாவது மீளப்பெற, மாற்ற அல்லது திருத்த வங்கி உரிமை கொண்டுள்ளது. ஏதேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இடையே முரண்பாடு காணப்படுமாயின், அவை வங்கியினால் தீர்த்துவைக்கப்படும். இவ் விடயத்தில் வங்கியின் தீர்மானமே இறுதியானதும் கட்டுப்படுத்துவதும் ஆகும்.
- பங்காளி நிறுவனங்களினால் வழங்கப்படும் சலுகைகள் மற்றும் நன்மைகளை, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வேளைகளில் மீளப்பெற, மாற்ற, திருத்த அல்லது புதிதாக அறிமுகப்படுத்த வங்கிக்கு உரிமையுண்டு.
- கணக்கு ஆரம்பிக்கப்படும் வேளையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமையவே கணக்கு விபரக்கூற்று எனக்கு/எமக்கு அனுப்பப்படும் என்பதை நான் /நாம் ஏற்றுக்கொள்கிறேன் /ஏற்றுக்கொள்கிறோம்.
- மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர, ஒவ்வொரு கணக்கு வகை தொடர்பாகவும் குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் நான் /நாம் இணங்குகின்றேன் /இணங்குகின்றோம்.

### ☐ சுப்பர் வல்ய சேமிப்புக் கணக்கு

- இக் கணக்கு இலங்கை ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும்.
- சுப்பர் வல்ய சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கு, ஆரம்ப வைப்பாக இ.ரூ.**25,000** தேவை. கணக்கிலுள்ள சராசரி மீதி இ.ரூ.10,000க்கு குறையுமானால்
  வட்டி வழங்கப்பட மாட்டாது. மாதாந்த சராசரி மீதி இ.ரூ.25,000க்கு குறையுமானால், விசேட கட்டணமாக இ.ரூ.650 அறவிடப்படும் என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்.
- வட்டியானது தினசரி மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு மாதாந்தம் வரவு வைக்கப்படும் என்பதை நான்/நாம் அறிவேன்/அறிவோம்.

### ☐ சுப்பர் வல்யூ நடைமுறைக் கணக்கு

- இக் கணக்கு இலங்கை ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும்.
- சுப்பர் வல்யூ நடைமுறைக் கணக்கை ஆரம்பிப்பதற்கு, ஆரம்ப வைப்பாக இ.ரூ.25,000 தேவை.
- மாதாந்த சராசரி மீதி இ.ரூ.25,000க்கு குறையுமானால், விசேட கட்டணமாக இ.ரூ.750 அறவிடப்படும் என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்.

### ☐ மை ட்ரீம் கணக்கு

- இக் கணக்கு இலங்கை ரூபாயில் அல்லது (என்னனால் குறித்துரைக்கப்படும்) வெளிநாட்டு நாணயத்தில் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும்.
- மை ட்ரீம் கணக்கை ஆரம்பிப்பதற்கு, குறைந்தபட்ச தொகையாக இ.ரூ.5,000 அல்லது சமபெறுமதியான குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் தேவை.
- உயர் கல்வி, குடியகல்வு, அவசர மருத்துவச் செலவு ஆகியவற்றில் ஒரு நோக்கத்திற்காக, ஆவணச் சான்று சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், மாத்திரம் மீளப்பெறுகையை வங்கி அனுமதிக்கும் என்பதை நான்/நாம் அறிவேன்/அறிவோம்.
- கணக்கிற்கான தற்போதய வட்டி வீதங்களை நான்/நாம் அறிவேன்/அறிவோம். **(அட்டவணை 1.1)**

## எம்ப்ளோயி பாங்கிங் கணக்கு (EB சுப்பர் வல்யூ நடைமுறைக் கணக்கு / EB சுப்பர் வல்ய சேமிப்புக் கணக்கு)

- இக் கணக்கு இலங்கை ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும்.
- கீழ்க்குறிப்பிட்டபடி தேவையான மாதாந்த பண அனுப்பீட்டை வரவு வைப்பதன் மூலம் எம்ப்ளோயி பாங்கிங் கணக்கை ஆரம்பிக்கவும் அதனைப் பேணவும் நான் இணங்குகின்றேன்.
- கீழ்க்காணும் பண அனுப்பீடுகள் மாதாந்தம் வரவு வைக்கப்படாவிட்டால், அனுப்பீடு செய்யப்படாமைக்கான மாதாந்தக் கட்டணம் ஒன்று அறவிடப்படும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

| பிரிவுகள் | குறைந்தபட்ச மாதாந்த அனுப்பீட்டுத் தொகை | மாதாந்தக் கட்டணம் |
|---|---|---|
| தனிப்பட்ட வங்கிச் சேவை | இ.ரூ. 35,000/- | இ.ரூ. 650/- |
| முன்னுரிமை வங்கிச் சேவை | இ.ரூ. 400,000/- | இ.ரூ. 2,500/- |

- எனது தற்போதய தொழில் வழங்குநரிடம் இருந்து பெறப்பட்ட எனது சம்பளச் சீட்டின் பிரதியொன்றை கணக்கை ஆரம்பிப்பதற்கான ஆவணங்களுடன் சேர்த்துச் சமர்ப்பித்துள்ளேன்.
- EB திட்டத்தின் கீழுள்ள சகல கணக்குகள் தொடர்பான சிறப்பம்சங்களையும் அவற்றுக்குரிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஒவ்வொன்றையும் நான் அறிவேன்.

**சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி வீதங்கள் - அட்டவணை 1.1**

| வட்டிப் படிகள் | சேமிப்புக் கணக்கு | மை ட்ரீம் கணக்கு | எம்ப்ளோயி பாங்கிங் கணக்கு |
|---|---|---|---|
| 3,000க்கு கீழ் | - | - | - |
| 3,000-9,999 | 0.00% | 4.00% | 0.00% |
| 10,000- 49,999 | 0.75% | 4.00% | 1.00% |
| 50,000- 99,999 | 1.00% | 4.00% | 1.50% |
| 100,000-149,999 | 1.25% | 4.00% | 2.00% |
| 150,000- 199,999 | 1.25% | 4.00% | 2.50% |
| 200,000- 499,000 | 1.25% | 4.50% | 2.50% |
| 500,000- 999,999 | 1.50% | 5.00% | 2.75% |
| 1,000,000க்கு மேல் | 2.00% | 5.00% | 3.00% |

**கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் (அட்டவணை 1.2)**

| கட்டணங்களும் அறவீடுகளும் (இ.ரூ.) | கூறுகள் | சேமிப்புக் கணக்கு | நடைமுறைக் கணக்கு | மை ட்ரீம் கணக்கு | எம்புளோயி பாங்கிங் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சேமிப்பு | நடைமுறை |
| தேவையான கணக்கு மீதி | தனிப்பட்ட வங்கிச் சேவை | 25,000/- | 25,000/- | 5,000/- | பொருந்தாது | பொருந்தாது |
| | முன்னுரிமை வங்கிச் சேவை | | திட்ட மட்டத்தில் | | | |
| பேரேட்டுக் கட்டண அறவீடு | தனிப்பட்ட வங்கிச் சேவை | 650/- | 750/- | பொருந்தாது | பொருந்தாது | பொருந்தாது |
| | முன்னுரிமை வங்கிச் சேவை | விலக்களிப்பு | விலக்களிப்பு | பொருந்தாது | பொருந்தாது | விலக்களிப்பு |
| பற்று அட்டை வருடாந்தக் கட்டணம் | தனிப்பட்ட வங்கிச் சேவை | 1,250/- | 1,250/- | பொருந்தாது | 1ஆம் ஆண்டு இலவசம் | 1ஆம் ஆண்டு இலவசம் |
| | | | | | | |
| ATM அறவீடுகள்- வைப்புகளுக்கு | அனைத்தும் | இலவசம் | இலவசம் | பொருந்தாது | இலவசம் | இலவசம் |
| ATM அறவீடுகள்- மீளப்பெறுகைகளுக்கு (உள்நாட்டு) | தனிப்பட்ட வங்கிச் சேவை | ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு 50/- | ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு 50/- | பொருந்தாது | மாதத்திற்கு 15 தடவைகள் விலக்களிப்பு | |
| | முன்னுரிமை வங்கிச் சேவை | இலவசம் | இலவசம் | பொருந்தாது | இலவசம் | |
| ATM அறவீடுகள்- மீளப்பெறுகைகளுக்கு (வெளிநாட்டு) SCB ATM | தனிப்பட்ட வங்கிச் சேவை | ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு 500/- | ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு 500/- | பொருந்தாது | ஒரு கொடுக்கல் வாங்கலுக்கு 500/- | |
| | முன்னுரிமை வங்கிச் சேவை | இலவசம் | இலவசம் | பொருந்தாது | இலவசம் | |

- இங்கு காட்டப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் வட்டி வீதங்கள் பணச் சந்தையின் மாற்றங்களுக்கேற்ப காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம் என்பதைத் தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.
- வங்கியினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் சாதாரண கணக்குகளுக்கு, கட்டணத் திட்ட வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏனைய சகல கட்டணங்களும் அறவீடுகளும் செல்லுபடியாகும்.
- கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு சகல ஸ்டான்டர்ட் சாட்டர்ட் கிளைகளிலும் கிடைக்கும் கட்டணத் திட்ட வழிகாட்டியின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளவும். அல்லது http://www.sc.com.lk என்ற இணையத்தளத்தை நாடவும்.

**முன்னுரிமை** வங்கிச் சேவை வாடிக்கையாளர்களுக்கு மட்டும்.

- ✓ ஒருங்கிணைக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதியொன்று எனக்கு / எமக்கு கிடைத்துள்ளது. அந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், காலத்திற்குக் காலம் உங்களால் செய்யப்படும் திருத்தங்கள், மாற்றங்கள் என்பவற்றிற்கும் பணிந்து நடக்க நான்/நாம் இணங்குகின்றேன் / இணங்குகின்றோம்.
- ✓ சேவை விதிமுறைகள் பற்றியும் எனக்கு/எமக்கு வங்கியினால் வழங்கப்படும் வசதிகள் (முன்னுரிமை வங்கிச் சேவை, உட்பட) தொடர்பாக அவற்றின் பிரயோகம் பற்றியும் நான் / நாம் வாசித்துப் பூரணமாக விளங்கிக்கொண்டேன்/விளங்கிக்கொண்டோம்.
- ✓ விண்ணப்பப் படிவத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம் முன்னுரிமை வங்கிச் சேவைக்காக நான் / நாம் இத்தால் விண்ணப்பிக்கிறேன் / விண்ணப்பிக்கிறோம். கணக்கில் பேணப்பட வேண்டிய குறைந்தபட்ச மீதி பற்றி நான்/நாம் நன்கு அறிந்திருப்பதுடன், அக் குறைந்தபட்ச மீதி பேணப்படாவிடின் அதற்கான அறவீட்டைச் செலுத்தவும் இணங்குகின்றேன் / இணங்குகின்றோம்

| பிரிவுகள் | குறைந்தபட்ச மீதி அனுப்பீட்டுத் அடிப்படை தொகை | மாதாந்தக் கட்டணம் |
|---|---|---|
| தனிப்பட்ட வங்கிச் சேவை | இ.ரூ. 5 மில்லியன் அல்லது அதற்கு சமமாக FCY | இ.ரூ. 2,500/- |

**முன்னுரிமை வாடிக்கையாளர்களுக்கு மட்டும்** - முன்னுரிமை வங்கிச் சேவைகளை எனது/எமது குடும்பத்தினருக்கும் விஸ்தரிக்க நான்/நாம் விரும்பினால், மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச கணக்கு மீதி பேணப்படும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அவ்வாறு விஸ்தரிக்கப்படும் என்பதையும் எனது/எமது கணக்கிலுள்ள மீதி குறையும் பட்சத்தில் குடும்பத்தினருக்கான இந்த வசதி வாபஸ் பெறப்படும் என்பதையும் நான்/நாம் பூரணமாக அறிவேன்/அறிவோம்.

மேற்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதி ஒன்று எனக்கு / எமக்கு வழங்கப்பட்டது என்றும் அதனை நான் / நாம் வாசித்து விளங்கிக்கொண்டேன் / விளங்கிக்கொண்டோம் என்றும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், காலத்திற்குக் காலம் வங்கியினால் கொண்டுவரப்படும் ஏதேனும் திருத்தங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க நான் / நாம் உடன்படுகிறேன் / உடன்படுகிறோம் என்றும் வாடிக்கையாளர் என்ற முறையில் நான் / நாம் உறுதிபபடுத்துகிறேன் / உறுதிப்படுத்துகிறோம்.

**பிரதான வாடிக்கையாளர் 1** **பிரதான வாடிக்கையாளர் 2** **பெற்றோர்/பாதுகாவலரின் கையொப்பம்**

(மை ட்ரீம் கணக்கிற்கு மட்டும்)

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்**

கையொப்பங்கள் உறுதிசெய்யப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டன:

**CB/CASA/MID-ENG/2017/02/01**